# குழந்தை யின்பம்.



# குழந்தை யின்பம்

அறிவபிவிருத்தி சங்கம்

மதுரை.

பால ஷண்முகானந்த சபா.

சுவாமி சுத்தானந்த பாரதியார்

பாடியது

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
[illegible]

☆

அன்பு நிலயம்

ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா


1942

உரிமை பதிப்புற்றது] [விலை அணா 4

*First Edition*: 1939

*Second Edition*: 1942

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1533
[illegible] எண்: 1533



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

Shakti Press Ltd., (Shanti Press) Madras.

# முன்னுரை

குழந்தை யின்பத்தை இளமுருகன் மலரடியில் வைத்து வணங்குகின்றோம்.

செல்வத்துட் செல்வம் சேய்ச் செல்வமே. சேயே நாடு; சேயே வீடு. மலட்டுவீடு வறட்டு நிலம்போலும். மக்களைப்பெற்று வளர்த்தல் மாந்தர் கடமையாகும். ஆண் குழந்தைகளையும், பெண் குழந்தைகளையும் அன்புடன் போற்றி வளர்த்துத் தமக்கும் உலகிற்கும் பயனாகும்படி செய்யவேண்டியது பெற்றோர் கடமை. பிறக்கும்போதே குழந்தையின் கல்வி தொடங்குகிறது. வீட்டில் முக்காற் பங்கும், பள்ளிக்கூடத்தில் காற் பங்குமாகக் குழந்தையின் வாழ்வு அமைகிறது. பிள்ளை ஆளாகுமட்டும் பெற்றோரின் நெருங்கிய பாதுகாப்பு இன்றியமையாதது. பிள்ளைப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு நல்ல நடையுடை பாவனை, நன்னெறிப் பழக்கம், அன்பு, வீரம், வாய்மை, தூய்மை, உயிரிரக்கம், அச்சமற்ற நேர்மை, தன்னல மற்ற உதவி, பொருமையற்ற பெருந்தன்மை யெல்லாம் பிடிபட வேண்டும். பிள்ளைகளே வருங்காலப் பெரியோர் கள். இவ்வாறு குழந்தைகளை அன்புடன் வளர்த்து, அவர்களால் வரும் இன்பத்தை நுகர இப்பாக்கள் பெரிதும் பயனாவன.

இப்பதிப்பில், 15, 18-ஆம் பாடல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டவை. குழந்தையின்பப் பாடல்களைப் பலர் பாட புத்தகங்களில் சேர்த்திருக்கிறார்கள். பல வீடுகளில் இப்பாடல்கள் முழங்குகின்றன.

1—1—'42
இராமச்சந்திரபுரம்.

அன்பு நிலயத்தார்

௨௩—௨—௨—௯

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

உ

# குழந்தை யின்பம்

## 1. கொஞ்சுங் குழந்தை

(புன்னாகவராளி—திஸ்ரஜாதி ஏகம்)

கொஞ்சுங் குழந்தைகளைக் கண்டால்—உச்சி
குளிர்ந்து, மகிழ்ந்தணைத்துக் கொள்வேன்.
பிஞ்சுத் தளிர்க்கரத்தைக் கண்ணில்—ஒற்றிப்
பிரியமாய்ப் பட்சணங்கள் கொடுப்பேன்.
குஞ்சுக் குழந்தைகளைக் கண்டால்—ஒரு
குட்டி யுலகமென மதிப்பேன்!—அவர்
வஞ்சமில் லாதமனந் தன்னில்—என்
வாழ்க்கையின் வாசகத்தைப் படிப்பேன்! க

சின்னச்சின்ன கதைகளைச் சொல்வேன்—அவர்
சிங்கார மழலையைக் கேட்பேன்.
வன்ன மலர்பறித்துக் கொடுப்பேன்—இயல்
வனப்பெல்லாங் காட்டி மகிழ்விப்பேன்.
"என்னைப் பிடி" யென்றோளிந் தோடிப்—பல
இன்பவிளை யாடல்களைப் புரிவேன்.
அன்னைபோல் அன்புமிகச் செய்வேன்—யானும்
ஆங்கோர் சிறுகுழந்தை யாவேன்! உ

தோளில் ஏறுமொரு குழந்தை—கையைத்
தொட்டுவட்ட மிடுமொரு குழந்தை.
தாளை யழுத்தித் தலைமேலே—இங்கே
தாவிக் குதிக்குமொரு குழந்தை.

*காளை யோட்டுமொரு குழந்தை—என்
காலை யிழுக்குமொரு குழந்தை.
வேளை போவ தறியாமல்—அவர்
வேடிக்கை தனிலென்னை மறப்பேன்! ௫

வீட்டை விளங்கவைக்குங் குழந்தை—இன்ப
விண்போல் ஆடிவருங் குழந்தை,
நாட்டை வாழவைக்குங் குழந்தை—அது
நாளை வரும்பெரிய மனிதன்;
வாட்டமில் லாதவரைப் போற்றி—நாளும்
வளர்க்கும்பெற் றோரினிது வாழ்க! தமிழ்ப்
பாட்டால் அன்புசெய்ய வருள்க—என்முன்
பாலர் வடிவுகொண்ட தெய்வம்! ௬

## 2. ஓடிவாடா கண்ணா!

(நாட்டைக் குறிஞ்சி—ஆதிதாளம்)

ஓடிவாடா கண்ணா ஓடிவாடா—என்
உள்ளங் குளிரச்சிரித் தோடிவாடா!
தேடிவாடா தாயைத் தேடி வாடா—கண்ணா
தீம்பா லமுதமுண்ண ஓடிவாடா!
பாடிவாடா கண்ணா பாடிவாடா—மலை
பாயும் அருவியைப்போற் பாடிவாடா!
ஆடிவாடா கண்ணா ஆடிவாடா—பச்சை
ஆனந்த மயிலைப்போல் ஆடிவாடா! ௧

கள்ளன்போல் ஒளியாது காணவாடா—கண்ணா
கற்கண்டு போல்மழலை சொல்லிவாடா!
மெள்ளமெள்ள வந்துபின்னே வேடிக்கையாக—என்
விழிகளை மூடிவிளை யாடவாடா!

*என்னைத் 'தை தை' என்று காளை மாடுபோல் வண்டி யோட்டி விளையாடும்.

அள்ளியென் பிள்ளையென முத்தமிடவே—கண்ணு
"அம்மம்ம மொஞ்சி" யெனக் கொஞ்சிவாடா!
புள்ளிக் கலைமான்போலத் துள்ளிவாடா—கண்ணு
பொன்மலர்க் கையாலென்னைப் புல்லவாடா!௨

ஓடிவாடா கண்ணு ஓடிவாடா—உன்
உச்சிமோந்து முத்தமிட ஓடிவாடா!

## 3. காப்பு

[குழந்தைக்கு ஆயுளும், ஆற்றலும் பெருகுமாறு இறைவனை வேண்டுதல்]

(புன்னாகவராளி — ஆதிதாளம்)

காத்தருள் பரம்பொருளே—என்
கண்ணான கண்மணியை!
நீத்தருள் பிணியிடரை—பிள்ளை
நீடூழி வாழவருள்!
உலகினைப் படைத்தவனே—எங்கும்
உயிர்க்குயி ரானவனே
நலங்களைத் தருபவனே—ஞான
நடம்புரி முழுமுதலே! (காத்தருள்)

தடைகளைத் தவிர்ப்பவனே—என்றுந்
தருமத்தைக் காப்பவனே
கொடைவளர் கற்பகமே—என்
குழந்தையை யாண்டருள்வாய்! (காத்தருள்)

கூற்றினை யுதைத்தவனே—அரக்கர்
குலத்தைவே ரறுத்தவனே

போற்றியுன் பாதமலர்—என்
புதல்வனைப் புரந்தருள்வாய்! (காத்தருள்)

சுந்தரத் திருமகளே—காளி
சுதந்தரக் கனலொளியே
செந்தமிழ்க் கலைமகளே—போற்றி
சிவசக்தி பரதேவி! (காத்தருள்)

ஆயுளும் ஆற்றல்களும்—அருள்
அன்பறி வின்பெழிலும்
தாயுளங் குளிர்ந்திடவே—கட்டித்
தங்கத்திற் கோங்குகவே! (காத்தருள்)

## 4. குழந்தை யழகு

(புன்னாகவராளி—திஸ்ரஜாதி ஏகம்)

பொன்னிளங் காலையுன் வண்ணமே—அதிற்
பூத்திடுஞ் செங்கதிர் உன்முகம்
மின்னலிற் கோத்தமுத் துன்னகை—கண்ணு
மெல்லிய ரோஜாப்பூ வுன்னிதழ்! க

வண்டுமொய் வெண்மலர் உன்விழி—சுருள்
மாமழை மேகமுன் குஞ்சியே
செண்டுசெய் அல்லியுன் மென்கரம்—வெற்றிச்
சீதேவி வாசமுன் மார்படா! உ

கொஞ்சும் பசுங்கிளி யுன்மொழி—இசை
கொட்டுங் குழலதைப் போலுமோ?
செஞ்சரண் அன்னமுன் சேவடி—என்
சிந்தைக் கமுதமுன் செவ்வியே! ங

கட்டிக் கரும்பும் கனிகளும்—பாலைக்
காய்ச்சித் திரட்டிய பாகுமுன்
தொட்டிலை யாட்டுமின் பாகுமோ—உன்னைத்
தொட்டணை யுஞ்சுக மாகுமோ? ௪

"அம்மா" வென் றென்னை யழைத்திடின்—விண்ணின்
ஆனந்தம் என்னுளம் பாயுதே—நீ
பொம்மைவைத் தாடிடக் கண்டதும்—இன்பம்
பொங்கித் ததும்புதென் கண்களில்! ௫

பட்டுநி லாவிற் கதைசொல்லிக்—கண்ணு
பாலமு தூட்டும்போ தென்மனம்
எட்டுது பேரின்ப வான்முடி—நெஞ்சில்
ஏறுதோர் அன்புக் கனல்வெறி! ௬

சின்ன சிநேகித ரோடுநீ—சிறு
தேர்கட்டிச் சாமிவைத் தாடுவாய்;
தின்னத் தரும் பண்டந் தோழர்க்குந்—தரத்
தெய்வநி வேதன மாக்குவாய். ௭

*இலைக்குழ லூதிப் பறைகொட்டி—நீ
இன்ப நடஞ்செய்யும் போதிலே,
தலைப்படும் என்னுட் பரவசம்—மனந்
தாண்டவ மாடும் உலகுடன்! ௮

---

* பூவரச இலை, தென்னோலைகளால் செய்த ஊதுகுழல்.

## 5. குழந்தைப் பேச்சு

(நாதநாமக்கிரியை—சாப்பு தாளம்)

அம்மாநான் விளையாடப் போவேன்—கையில்
அன்புடன் பட்சணந் தந்தனுப் பென்னை,
சும்மாநான் உட்கார மாட்டேன்—நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகை யாச்சு. க

பூப்பறித் தாடுவோம் கொஞ்சம்—சாமி
பூசைசெய் தாடுவோம் பூரதங் கட்டி,
வேப்ப மரத்தடி மண்ணில்—சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்! உ

வட்டக் குளத்திற்குப் போவோம்—களி
மண்ணை யுருட்டித் திரட்டி வருவோம்.
சட்டிகள் பொம்மைகள் செய்வோம்—பின்னே
சாதஞ் சமைத்தொன்றாய்ச் சாப்பிட் டலம்பிப்

பாட்டுக் கச்சேரிகள் செய்வோம்—நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு;
கேட்டுச் 'சபா'ஷெனச் சொல்வார்—பின்பு
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்! ச

வேட்டிகளால் திரை கட்டிப்—பல
வேடங்கள் போட்டொரு நாடக மாடிக்
காட்டுவோம் பாரதக் காட்சி—நான்
கண்ணனின் சொற்படி காண்டீவ னாவேன்! ரு

வீரப் படைகளைச் சேர்ப்பேன்—பொல்லா
வீம்புசெய் துஷ்டரை வீழ்த்திநான் வெல்வேன்.
பாரதத் தாய்ப்பணி செய்வேன்—தீய
பந்த மறுத்துச் சுதந்தர மீவேன். சு

கண்ணன், முருகன், இராமன்—போலே
காந்தி, திலகர், சிவாஜியைப் போலே
புண்ணிய வீரனாய் வாழ்வேன்—அம்மா
பொய்யில்லை ஆடிடும் போதென்னைப் பாராய்!

அம்மாநான் விளையாடப் போவேன்!

## 6. விளையாட அனுப்பல்

(தோடி - ஆதிதாளம்)

பல்லவி

ஆடிடு கண்மணியே—தோழருடன்
ஆடிடு கண்மணியே!

அநுபல்லவி

பாடிக் குதித்து நடித்துப் பகலெல்லாம் (ஆடிடு)

சரணங்கள்

மேகத்தைக் காண்பசுந்
தோகை மயிலென (ஆடிடு)

திங்களைக் கண்டுள்ளம்
பொங்குங் கடலென (ஆடிடு)

காற்றினில் ஆடிடுங்
கற்பகக் கொம்புபோல் (ஆடிடு)

விளையாட்டுச் சாமான்கள்
வேண்டிய நல்குவேன் (ஆடிடு)

கிட்டி, பாண்டி, கிளித்
தட்டு, சடுகுடு, (ஆடிடு)

மணல்வீடு கட்டி
மகிழ்ந்து மனம்போலே (ஆடிடு)

அன்புடன் எல்லாரும்
இன்பமாய்ப் பார்க்கவே (ஆடிடு)

கண்ணன் அருச்சுனன்
கார்முக ராமன்போல் (ஆடிடு)

மோகனப் பூங்குழல்
வேகமாய் ஊதிநீ (ஆடிடு)

பிள்ளையில் உன்பெரும்
உள்ளம் விளங்கிட (ஆடிடு)

தெய்வப் பெரியார்கள்
செய்கை விளக்கிநீ (ஆடிடு)

முத்துமுத் தாய்ப்பேசித்
தித்திக்குஞ் செந்தமிழ் (ஆடிடு)

கண்டுநான் பேரின்பங்
கொண்டு மகிழ்ந்திட (ஆடிடு)

## 7. பிள்ளைச் சேட்டை

(செஞ்சுருட்டி—திரிபுடை தாளம்)

அம்மாவுன் முருகனை அடக்கு சற்றே—எங்கள்
ஆத்தி ரத்தைத் தூண்டுகிறான் அனுதினமும்....
கும்மாளம் போடுகிறான் கூடிக் குதித்தே—எங்கள்
குட்டிகளைக் குட்டிச்சுவ ராக்க முளைத்தான். க

கொம்புகளை யொடிக்கிறான் கோதண்டஞ் செய்ய—தேசக்
கொடிகட்டப் புடவையைக் கொண்டுபோகிறான்...

வம்பிற் கிழுத்தலைப்பான் வாயைப் பெருக்கி—அம்மா
வாலொன்றே பாக்கியிந்த வானரத்திற்கே! ௨

பயல்களை யேவிமெல்லப் பதுங்கி வந்தே—வீட்டில்
பக்ஷணப் பானைகளைக் காலிபண்ணு வான்
நியமமாய்ப் பூசைபண்ணும் மூர்த்திகளையே—தெரு
நெடுகப் புழுதிமண்ணிற் கட்டியிழுப்பான். ௩

வீட்டிலொரு கழுதையை ஓட்டி விடுவான்—'ஐயா,
விருந்தாளி பாரு'மெனக் காட்டி நகைப்பான்
'பாட்டுக்கச் சேரி' யென்றெம் பாத்திரங்களை-மிகப்
பரவசங் கொண்டுபட்டுப் பட்டென் றடிப்பான். ௪

* * *

நண்டுப் படைகளைச் சேர்ப்பான்—எங்கள்
நாட்டுப் படையிதென் றூர்ப்பான்;
சண்டைக் கருவிகள் வேண்டும்—"தாத்தா,
தாரும் தடிக்கம்பை!" யென்பான்—"அடா
மண்டையிற் போடுவேன்" என்றால்—பின்னே
'வவ்வெவ்வே' யென்றிழித் தேகி
அண்டை யுலரும் விறகைத்—தூக்கி
ஆளுக்கொன் றாகக் கொடுப்பான். ௫

* * *

வீரக் குரங்குப்படைச் சூர னிவனும்—எங்கள்
வீடெல்லாம் மதுவன மாக்கி விடுவான்
பாரதப் போர்க்களமாம் வீதிக ளெல்லாம்—தேச
பக்தியற்றார் கௌரவராம் பார்த்த னிவனும். ௬

சூரபத் மாவையிந்தச் சுண்டைக்காய்ப் பயல்-கையாற்
சுழற்றி யெறிபவனும் சுதந்தரனும்!
'பாரதத் தாய்வருந்தும் பந்த மறுப்பேன்'—என்று
பரதேசத் துணிகளைப் பற்றி யிழுப்பான். ௭

மண்ணடித்தெந் திண்ணையெல்லாம் பள்ளிக்கூடம்—வை
“மாமா நீ படிக்கவா!” பாட மின்றென்பான். [த்து
பெண்கள் பிருந்தாவனக் கோபிமாராம்—வெகு
பிரியமாய் வந்தவர்கைப் பிடித்திடுவான். அ

கண்ண னிவனும் ; ராமன், கந்த னிவனும்—வரக்
கண்டவுடன் கைநிறையப் பக்ஷணந் தந்தால்
“பண்ணமாட்டேன் விஷமங்கள்” என்றுபகர்வான்-பையப்
பசக்கென்று பின்னலிழுத் தோடி மறைவான். கூ

‘சடுகுடு’ பாண்டி யாடிக் கூச்ச லிடுவான்—சுடு
சரமென முதுகினிற் கிட்டி யடிப்பான்....!
குடுகுடுப்பாண்டி யெனக்குறிகள் சொல்வான் ‘என்போற்
குழந்தைகள் சாமியருள் கொடுக்கு’ மென்பான். க0

‘மடியா நீ’ என்றுவிழுப் போடுந் தொடுவான்—“ அடா
மர்க்கடமே” என்றால் “ அதுன் வடிவ ” மென்பான்
பிடித்துநா லறைவைக்கப் பின்னே தொடர்ந்தால்-எங்கள்
பின்னால் ஒளிந்து வந்தே “பெப்பெப்பே” என்பான். கக

“ காதோடே செய்தி ” யென்று கிட்ட வருவான்—உன்
“ கணவன்பேர் சொல்லி டெ ”னக் கண்சிமிட்டுவான்
மாதர் குளத்தங்கரை வம்புக ளெல்லாம்—கேட்டு
மனைதொறுஞ் சென்றுநிதந் தமுக்கடிப்பான். கஉ

வெளியி லழைத்துச் சென்றெங் குழந்தைகளை—நாங்கள்
வேதனைப்பட் டிரங்கிடச் சோதனை செய்வான் !
புளியமரப் பூச்சாண்டிக் கதைகள் சொன்னால்—அங்கே
போய்நின் றிருட்டிலெம்மை வெருட்டிடுவான். கங

கன்றுகளைக் கட்டவிழ்த்துப் பாலருத்துவான்—அருங்
கம்பக் கவிதைகளைக் கப்பல் விடுவான்.
"கொன்றிடுவேன் உன்னை" யென்று கோவித்துக் கொண்
டால்—"கொஞ்சம்
குஷியாய் இருப்போமடி" யென்று நயப்பான்! கச

அயர்ந்தால் முகத்திற் கரி யப்பிடுவான்—"உன்
அழகினை மூடிக்கொள்!" ளென் றுசியஞ் செய்வான்
"பயமில்லை பிடி!" யென்றே பாய்ந்து விரைவான்—அகப்
பட்டுக்கொண்டாற் சாகசங்கள் செய்து கழல்வான்!

"அம்மாகிட்டச்சொல்லியுதைவாங்கித்தருவேன்"-என்றால்
"அச்சமில்லை! அச்சமில்லை!" யென்று குதிப்பான்...
எம்மால் இயன்றமட்டும் இதம்பதமாய்ப்—பார்த்தோம்
ஏறுகிறான் தலைமேலே யினிப் பொறுக்கோம்! கரு

## 8. பிள்ளையுரை

(புன்னாகவராளி—திஸ்ர ஜாதி ஏகம்)

### தாய்

இப்படியா பேரெடுத்தாய் ஊரினி லெல்லாம்—இனி
இல்லை நீ யென்குழந்தை போ, போ, போ
தப்புதண்டா செய்யும்பிள்ளை எனக்கு வேண்டா—
என்னைத்
தாயென்று கூப்பிடாதே போ, போ, போ! க

### பிள்ளை

வேறு

கோழைகள்முன் வீரங் காட்டினேன்—அம்மா,
கோவித்துக் கொள்ளாது கேளடீ:
ஏழைமுகம் பார்க்கா லோபிகள்—பண்டம்
ஈந்தனன் பங்குவைத் தெல்லார்க்கும்;

வாழத் தெரியாதார் பூட்டிடும்—சோற்றை
வயிறு பசிப்பவர்க் கீந்தனன்.
தோழரவர் வீட்டுப் பிள்ளைகள்— கேட்டாற்
சொல்லுவர் என்பக்கம் உண்மையை! உ

காற்றுப் படாதொரு மூலையில்—மூடர்
காவல் வைப்பார்தங் குழந்தையை—நான்
காற்றூட விளையாடச் செய்கின்றேன்—துன்பக்
கட்டுகள் யாவும் பிளக்கின்றேன்!
சோற்றுக்கு வேலை யவசியம்—நாட்டிற்
சோம்பேறிப் பிள்ளை சுமையன்றோ!
ஆற்று மணலினில் ஆடுவேன்—தாயே
அன்னம்போட் டென்னை யனுப்படீ! ௩

## தாய்

### வேறு

பொன்னான மேனியெல்லாம் புழுதியாச்சே—கண்ணா
புனலாட்டித் தலைபின்னிப் பொட்டிடுகின்றேன்;
வன்னக் கதருடுத்தி வாரியணைத்தே—"நீ
வாழ்க"வென் றொருமுத்தந் தந்துமகிழ்வேன்!
ஊருக்கு நல்லவனாய் நடந்து கொள்வாய்—உனக்
குண்மைசில வுரைக்கின்றேன் உன்னி நடப்பாய்!

## பிள்ளை

யாருக்கும் அஞ்சாமல் அன்னை மொழியை—நான்
அன்புடன் காப்பவனென் றறிந்திடுவாய். ரு

## 9. செல்லக் கிளியே!

(ஆனந்தபைரவி—ஆதிதாளம்)

அன்பை வளர்க்க வேண்டும் — செல்லக் கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும் ,,
உன்போற் பிறரை யெண்ணு ,,
உலவிடுங் கோயி லுயிர் ,,
அன்னைசொற் கேட்க வேண்டும் ,,
அப்பாவைப் பணிய வேண்டும் ,,
உன்னைப் பெற்று வளர்த்தார் ,,
உயிர்போல் உன்னை நேசித்தார் ,,
தெய்வத்தைச் சிந்தனை செய் ,,
தேசத்தை வந்தனை செய் ,,
பொய்கோள் பொறாமை விடு ,,
பொறுமை யடக்க மணி ,,
உடலை யுறுதி செய்ய ,,
ஓடியாடு மாலைப் போது ,,
குடலை நிதங் கழுவு ,,
குளித்துப் பசித்துப் புசி ,,
பூமணச் சோலை யிலே ,,
புட்க ளைப்போ லுலவு ,,
தாமரை போல்அழ கொளிர் ,,
தபனன் கதிர் விரும்பு ,,
யாருக்கும் உப காரி ,,
அஞ்சாத சத்திய வான் ,,
ஊருக்கு நல்ல வனும் ,,
உற்ற சிநேகித னும் ,,
அழுது வடியு முகம் ,,
ஆபாசக் களஞ்சி யம் ,,

பழுதுசெய் துஷ்டப் பிள்ளை செல்லக் கிளியே
பாம்புதேள் போல நினை ,,
பெற்றவர் மனங் குளிரச் ,,
பேரறிஞ ருகை வேண்டும் ,,
உற்றவர் மனங் குளிரச் ,,
உதவி புரிய வேண்டும் ,,
கற்றபுல வர்க்க டங்கி ,,
கல்வி மிகக் கற்கவேண்டும் ,,
நற்றவப் பெரியாரைச் ,,
நாடி வணங்கவேண்டும் ,,
காலை, கும்பிட்டெழுந்து ,,
காலாற நடந்துவா ,,
சோலை மலரழகில் ,,
சுத்தனை வழிபடு ,,
புன்னகை பொங்கிவளர் ,,
பூங்குயில்போற் பாடிடு ,,
அன்னம்போல் நடந்திடு ,,
அமுதத் தமிழைப்பேசு ,,
வம்புக்குப் போகாதே ,,
வாய்வார்த்தை வீசாதே ,,
வெம்பிச் சினக்காதே ,,
விஷமங்கள் செய்யாதே ,,
ஏழைக் கிரங்கவேண்டும் ,,
இட்டுணவு கொள்ளவேண்டும் ,,
தோழமை கொள்ளவேண்டும் ,,
தூயநல்ல நேயரையே ,,
அஞ்சாத நெஞ்சுவளர் ,,
அசட்டுச் செயல்களொழி ,,

சஞ்சலப் பேயைத்தவிர் செல்லக் கிளியே
சாமியுன்னுள் இருக்கிறார் ”
ஒன்றையும் வருத்தாதிரு ”
உயிர்க்கொலை பெரும்பாவம் ”
கன்றுக் கிரங்குந் தாய்போல் ”
கருணைகொண் டிதஞ்செய்வாய் ”
தீரரின் வாழ்வை நினை ”
தினமும் பெருமைபெறு ”
வீரம் பெருகிவளர் ”
வெற்றி யருளுந்தெய்வம் ”

## 10. தாலாட்டு

(நீலாம்புரி – ஆதிதாளம்)

ராரிரரோ ராராரோ ராரிரரோ ராராரோ
ராரிரரோ ராராரோ ராரிரரோ ராராரோ!

கண்ணேயென் கண்மணியே கட்டிக் கனிரசமே
விண்ணேவின் னாரமுதே வீரவி ளக்கொளியே க

காதற் பசுங்கிளியே கற்பகப் பூங்கொடியே
கீத மணிக்குயிலே கிண்கிணி யன்னமே உ

தேன்மலர்த் தென்றலும் திங்களின் வெண்ணிலவும்
மேனிவ ருடப்பஞ்சு மெத்தையிற் கண்ணுறங்காய் ௩

தாரகை வான்மோனத் தாலாட்டுப் பாடிடக்
கார்மேக வண்ணனின் காவலிற் கண்ணுறங்காய் ச

அன்பலை பொங்கும்பால் ஆழிமுத் தேமணியே
இன்பலை பொங்கிவளர் என்மார்பிற் கண்வளராய்

தேசப் புகழ்சிறக்கத் தீரக் கனல்விளங்க
ஈச னருளுணர்வில் இன்பமே கண்வளராய் ௬

பாசமெல்லாம் உன்மேல் பட்சமெல்லாம் உன்மேல்
ஆசை மரகதமே அன்பேநீ கண்ணுறங்காய் ௭

முத்திளங் கண்ணனின் மோகனப் பூங்குழல்
சித்தத்திற் சொக்கிடத் தேனேநீ கண்வளராய் ௮

தத்துவப் பாரத தர்மப் பயிர்போலவே
நித்தியஞ் சீர்பெற நின்மலா கண்ணுறங்காய் ௯

வேதம் உபநிடதம் வித்தகர் செந்தமிழ்க்
கீதங்கள் வாழ்த்தொலிக்கக் கீர்த்தியே கண்வளராய் ௧௦

நவயுக வீரனே, நான்பெற்ற சூரனே,
தவமணியே, ஞானத் தருவேநீ கண்வளராய் ௧௧

வீர சிவாஜியைப்போல், வெற்றி விஜயனைப்போல்
பாரதத் தாயளித்த பாக்கியமே கண்வளராய் ௧௨

விக்ரம சோழனைப்போல், வீர வழுதியைப்போல்,
அக்ரமம் போக்கியறம் ஆளநீ கண்வளராய் ௧௩

உத்தமர் தவத்தினை ஓங்குயிர் நலத்தினைப்
பத்தினிக் கற்பினைப் பாலிக்கக் கண்வளராய் ௧௪

உள்ளமாங் குண்டத்தில் ஓங்கார மந்திரத்தால்
ஒள்ளிய தெய்வக்கனல் ஓங்கநீ கண்வளராய் ௧௫

நாரணன் ஆடலை, நம்ப னருட்செயலைப்
பூரணர் பாடிடப் பொங்கிநீ கண்வளராய் ௧௬

பூலோக லீலையில் புண்ணியத் தொண்டுசெய்தே
ஸாலோக ஸாயுஜ்யம் சாரநீ கண்வளராய் ௧௭

சிங்கம்போல் நெஞ்சமும், சித்தர்போல் சக்தியும்,
தங்கம்போல் மேனியுந் தாங்கிநீ கண்வளராய் கஅ

வெற்றி யின்பத்துடனே வேதாந்த வீறுடனே
சிற்றம்ப லச்சுடராய்த் தேவநீ கண்வளராய் ககூ

வாழ்க தமிழரசி வாழ்க தமிழர்குலம்
வாழ்க தமிழமுதம் வாழ்க வுலகமெல்லாம்! உ0

## 11. எழுந்த குழந்தை முகம்

(பைரவி—ரூபகதாளம்)

காலைப் பசுவயலோ—தென்றல்
கவ்வும் மகரந்தமோ!
சோலை யிளங்குயிலும்—யாழுஞ்
சொக்கும் இசையமுதோ!
மாலை வனப்பினிலே—மலர்ந்த
மல்லிகைப் பூங்கொடியோ!
கோல வியற்கையிலே—குலுங்குங்
கோடி யழகெழிலோ! க

முத்து முகம்பார்த்தென்—மனத்திலோர்
மோகங் கனலுதடா!
கத்துது நெஞ்சக்கிளி—இளங்
கண்ணாவென் றேதினமும்!
எத்துந் திரைக்கடலைப்—பொன்னாக்கி
யேறுஞ் சுடரொளிபோல்,
சித்தத் திரைகளிலே—அன்பொளி
சிலுசி லுக்குதடா!

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1533
நன்கொடை எண்: 1533

தாவிடும் இன்பவெள்ளம்—எனது
தங்கக்கிளியைக் கண்டால்,
நாவால் உரைத்திடவோ—உணர்வை
ஞானியர்க்கும் அரிதாம்.
தேவரின் விண்ணகத்தைக்—கண்டேனுன்
செம்மலர்க் கண்ணகத்தில்
ஆவி முழுவதிலும்—அழகின்
அமுதம் ஊறுதடா ! ௩

## 12. மயில் பாட்டு

(புன்னுகவராளி—திரிபுடை தாளம்)

வானத்தைப் பாரடியோ—மயிலே
மாமழை மேகமெல்லாம்
கான முரசடிக்க—மின்னல்
கண்வீசி யாடுதடீ !
மோன வியப்புடனே—புவியுளம்
முற்றுங் குளிருதடீ !
ஆனந்தத் தோகைவிரி—மயிலே
ஆடிக் களித்திடுவோம். ௧

அந்தியின் செந்தணலில்—மயிலே
அல்லி நகையொளியில்
சந்தனம் பூசுநிலா—மதியில்
சாந்தர் மனவெளியில்
இந்திர வில்லதனில்—அலை
யேறும்பொன் னாழியினில்
சுந்தரத் தோகைவிரித்—தென்கவி
சொக்கிநின் றாடுதடீ ! ௨

வன்ன மணிவானம்—மயிலே
மாநிலத் தோகையடா !
மின்னிடுந் தாரகைகள்—பூமிதேவிக்கு
விண்மணி மாலையடா !
சின்னக் குருவியினம்—பறக்கும்
சிங்கார வீணையடா !
உன்னடங் கண்டுவிட்டால்—மயிலே
உள்ளெல்லாஞ் சிற்சபையே. ௩

சிந்தா மணியடியோ—உனக்குச்
செங்கதிர் வட்டமெல்லாம்
சாந்தமுட னருவி—உனக்கே
தாள மிசைக்குதடா !
இந்த வுலகைவளர்—வான்மழை
யிடி முழவடிக்குதடா !
தந்திமித் தோமெனவே—மயிலே
தாண்டவஞ் செய்திடுவோம். ௪

## 13. முருகன் பாடுகிறான்

(செஞ்சுருட்டி—திஸ்ர ஏகம்)

**தாய்**

என்ன பண்ணுகின்றாய்—முருகா
எழுந்து வாடா கண்ணே
அன்னம் ஆறிப் போகும்—அங்கே
அப்பா காத்திருக்கார். ௧

**குழந்தை**

பாட்டுப் பாடுகின்றேன்—இப்போ
பசிக்க வில்லை யம்மா

கேட்டுவிட்டு நீபோ—புதிய
    கீதஞ் சொல்லுகின்றேன். உ

### தாய்

என்ன பாட்டுத் தெரியும்—நீ
    எவரிடம் படித்தாய்?
கன்னுப் பின்னு வென்றே—கத்திக்
    காதைத் துளைத்திடாதே! ௩

### குழந்தை

பறவைப் பாட்டைக் கேட்டேன்—நானும்
    பாட்டுப்பாடக் கற்றேன்—அது
சிறகை வீசிப் பறக்கும்—போதே
    திருநடங்கள் கற்றேன். ௪

என்ன ராக தாளம்—என்றே
    ஏதும் யானறியேன்
வன்னக் கோகிலம் போல்—நானும்
    வந்தபாட்டைச் சொல்வேன். ௫

மலையி னின்ற ருவி—பாய்ந்து
    வரக்கண் டுள்ளங் குளிர்வேன்—அது
விலையில்லாத பாட்டை—எனக்கு
    விரும்பித்தந்து செல்லும். ௬

பாட்டுக் கற்றுக் கொண்டேன்—அம்மா
    பாயும் வெள்ளம் போலே
காட்டுப் பட்சி போலே—நானும்
    கவிகள் பாடுகின்றேன். ௭

## 14. பஞ்சவர்ணக் கிளி

(முகாரி—திஸ்ர ஜாதி ஏகம்)

பஞ்சவர்ணக் கிளியே—உனக்குப்
பழங்கள் கொண்டுவந்தேன்
கெஞ்சுகிறே னுன்னைக்—கிளியே
கிட்டவந் தின்பமளி!
கொஞ்சிக் குலாவிடுவோம்—உன்னைநான்
கூண்டி லடைக்கவில்லை
அஞ்சிறை தாராயோ—கிளியே
யானும்விண் ணிற்பறப்பேன்! க

நீல விதானத்திலே—இருவரும்
நேசமாய்ச் சென்றிடுவோம்
காலைப் பவளமலை—கண்டு
கதிரவன் ரதத்தில்சென்று
மாலைச்செஞ் சோதியிலே—குளிப்போம்.
மல்லிகைத் தென்றலுடன்
வேலைக்கட லிசைக்க—முத்து
விண்ணகங் கண்வளர்வோம்! உ

சந்திரத் தோணியிலே—மின்னுந்
தாரகை யேரியிலே,
அந்தரம் ஓமொலிக்கச்—செல்வோம்
அருணச் செந்துறைக்கே-பின்னர்
சுந்தரக் காலையிலே—உலகைச்
சுற்றிக் கண்டு மகிழ்வோம்
விந்தைகள் கண்டுவப்போம்—கிளியே
விரும்பிச் சொல்லுகின்றேன்! ௩

வெள்ளிமலை காண்போம்—கௌரிமுடி
மீதினைப் பாறிடுவோம்
தெள்ளிய மானசநீர்த்—தடத்தில்
சேர்ந்துநாம் நீந்திடுவோம்
வெள்ளை யமுதுண்ண—நேரே
விண்வளர் சோலைசெல்வோம்—கிளியே
ஒள்ளிய தேவருக்குச்—செந்தமிழின்
ஓசைவிருந் தளிப்போம்! ௬

## 15. வெண்ணிலா

(நீலாம்புரி—ஆதிதாளம்)

அல்லிக் குளத்தினிலே வெண்ணிலாவே
அன்னம்போல் ஆடுகின்றாய் வெண்ணிலாவே!
மெல்லிய தென்றலுடன் வெண்ணிலாவே
மேனியைக் கொஞ்சுகின்றாய் வெண்ணிலாவே!
காதலர் வாழ்வினிலே வெண்ணிலாவே
கலந்து சுகந்தருவாய் வெண்ணிலாவே....!
வீதிச் சிறுவருக்கு வெண்ணிலாவே
விளையாட்டுத் தோழனுவாய் வெண்ணிலாவே!
அன்புக் கதிர் பொழிவாய் வெண்ணிலாவே
அமுத கலசம் போன்றாய் வெண்ணிலாவே!
இன்ப நகை புரிவாய் வெண்ணிலாவே
இருளை விலக்கிடுவாய் வெண்ணிலாவே!
விண்ணின் சுடர்களிடை வெண்ணிலாவே
வெண்டா மரையைப்போன்றாய் வெண்ணிலாவே!
தண்முகங் காட்டிநிதம் வெண்ணிலாவே
தாகந் தணித்திடுவாய் வெண்ணிலாவே!

பூரண முகங்காட்டி வெண்ணிலாவே
பொலிவிற் குறைவதேனோ வெண்ணிலாவே!
யாரதுன் மேனியை வெண்ணிலாவே
அப்படி மாற்றுகின்றார் வெண்ணிலாவே?
மேகப்படலங்கள் வெண்ணிலாவே
மேனியைக் கவர்ந்தாலும் வெண்ணிலாவே!
மோகமில்லா ஞானிபோல் வெண்ணிலாவே
மோனமாய்ச் செல்லுகின்றாய் வெண்ணிலாவே!
துன்பக் கடல் கடக்க வெண்ணிலாவே
தோணிபோல் உதவுவாய் வெண்ணிலாவே!
என்பசி யெல்லாந் தீர வெண்ணிலாவே
இதயசாந்த மளிப்பாய் வெண்ணிலாவே!
அலைகளைக் கூத்தாட்டும் வெண்ணிலாவே
அரன்முடி மேல்வளரும் வெண்ணிலாவே!
கலைவளர் மாமணியே வெண்ணிலாவே
கருணைவழி காட்டுவாய் வெண்ணிலாவே!

## 16. ஆடிப் பாடல்

(குந்தலவராளி—திஸ்ர ஜாதி ஏகம்)

வா, வா, மயிலே, வனக் குயிலே,
போவோம் காலை பூஞ்சோலை. க

கொக்கொக் கோழி கூவுது பார்,
அக்குப் பட்சி அகவுது கேள்! உ

பார்பார் கிழக்கே பசுங் கதிரை!
சேர்சேர் மலர்க்கை சேவிப்போம். ந

தேவா லயமாம் திருவுலகம்;
ஜீவர்களெல்லாஞ் சின்மயமாம். ச

அன்பா யிருப்போம் அனைத் துயிர்க்கும்
பண்பாய் நடப்போம் பாருலகில். ரு

## 17. தேகப்பயிற்சி

(ஹிந்துஸ்தான் தோடி—திஸ்ரஜாதி ஏகம்)

தேகப் பயிற்சி செய்வோம்—வரிசையாய்ச்
சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்
வேகமாய்க் கால்வீசி—நடப்போம்
வேங்கை போற் பாய்ந்திடுவோம். க

சோம்பலை வெட்டியெறி—இடுப்பைத்
தோகை மயில்போல் வளை
'ஓம்' என்றுயிர்த்து விடு—மார்புவிரிந்
துரம்பெற் றோங்கி டவே! உ

கையை மடக்கிடு வோம்—முன்னும்பின்னுங்
கையைச் சுழற்றிடுவோம்
பையவுட் கார்ந்தெழுவோம்—பஸ்கிசெய்து
பாதத் தசை வளர்ப்போம். ௩

வேர்த்துச் சதைபுரளக்—கசரத்
வேண்டுமட்டுஞ் செய்வோம்
சேர்த்துக் கரங்களெல்லாம்—வட்டமாய்ச்
சேர்ந்து நடமிடு வோம்! ச

## 18. எங்கள் வளநாடு

(குறவஞ்சி மெட்டு)

சிவனிருக்கும் இமயமலை எங்கள் வள நாடு
திருமாலின் ஏழுமலை எங்கள் வள நாடு
தவமுனிவர் பொதிகை மலை எங்கள் வள நாடு
சண்முகனார் பழனிமலை எங்கள் மலை நாடு

கங்கைவளர் பச்சை நிலம் எங்கள் வள நாடு
காவிரியின் பூம்பொழிலும் எங்கள் வள நாடு
சங்கநிதி பதுமநிதி தருவ தெங்கள் நாடு
சங்கரனார் விளையாட வருவ தெங்கள் நாடு

முத்திறைக்கும் கடலுடுத்த தெங்கள் வள நாடு
முதுகுமரி தவம்வளர்ப்ப தெங்கள் வள நாடு
எத்திசையும் கப்பல்விட்ட தெங்கள் வள நாடு
எல்லையில்லாத் தொழில்புரியும் எங்கள் வள நாடு

ஏற்றுமதிச் சரக்குகளால் இறக்குமதிப் பொன்னால்
என்றென்றுந் திருவிளங்கும் எங்கள் வள நாடு
நாற்றிசையும் நல்லபுகழ் பெற்ற தெங்கள் நாடு
நாகரிகத் தில்முதன்மை யுற்ற தெங்கள் நாடு

மாங்கனிவாய்க் குயில்கள் மணி வாசகத்தைக் கூவும்
மலையருவி வள்ளுவனார் மறைமுழங்கித் தாவும்
பூங்கிளிகள் சிவமுருகன் திருப்புகழைப் பேசும்
புன்சிரிப்புத் தாமரைகள் போத வொளிவீசும்

அருட்கவிகள் வாழுநிலம் எங்கள் வள நாடே
ஆரியர்வாழ் வேத நிலம் எங்கள் வள நாடே
பொருளுணர்ந்த புலவர் நிலம் எங்கள் வள நாடே
போரதிரும் வீரர் நிலம் எங்கள் வள நாடே

கலையழகு குலுங்குவதும் எங்கள் வள நாடே
கற்பொளியால் விளங்குவதும் எங்கள் வள நாடே
கொலைமறுத்துண் சைவர் நிலம் எங்கள் வள நாடே
கொடைமிகுந்த செல்வர் நிலம் எங்கள் வள நாடே

தெய்வபக்தி பிறந்ததுவும் எங்கள் வள நாடு
தேசபக்தி சிறந்ததுவும் எங்கள் வள நாடு
வையகத்தில் வாழும்வகை காட்டு மெங்கள் நாடு
மங்கலநன் மனையறத்திற் பொங்கும் வள நாடே

சங்கரரின் ஞானவெள்ளம் தழைத்த தெங்கள் நாடு
தமிழடியார் திருமுறைகள் செழித்த தெங்கள் நாடு
இங்கிதமாய் நம்மாழ்வார் இசைத்த மறை நாடு
இணையில்லாக் கம்பக்கவி யிலகு தமிழ் நாடே

இட்டருந்தும் வண்மையுள்ள தெங்கள் வள நாடே
இகபரத்தின் சுகந்தருவ தெங்கள் வள நாடே
கட்டறுந்தே சுதந்தரமாய் வாழ்க வெங்கள் நாடே
கடவுளருள் காக்குமெங்கள் கற்பக நன்னாடே.

## 19. குழந்தையின் தோத்திரம்

(ஹிந்துஸ்தான் தோடி—முத்தாளம்)

உள்ளத்தில் உள்ள பரமா—எனக்
குன்னருள் வெள்ளத்தை யீவாய்
கள்ளமில்லாத மனத்தால்—உன்னைக்
காலையு மாலையு நினைப்பேன்! க

கல்வி யறிவொளி யீவாய்—நற்
கலையிற் புலமை யளிப்பாய்
நல்ல வொழுக்கம் அருள்வாய்—தாய்
நாட்டின் மணிப்பிள்ளை யாவேன்! உ

துச்ச நினைவை யொழிப்பாய்—என்றுந்
தூய நினைப்பை வளர்ப்பாய்
அச்சப் பிசாசைத் துரத்தி—வீரர்
ஆண்மையும் ஆற்றலுந் தாராய்! ங

தாயுந் தகப்பனும் நீயே—கல்வி
தந்துத வுங்குரு நீயே!
நோய்தவிர் வைத்தியன் நீயே—நான்
நூறாண்டு வாழச் செய்வாயே! ச

உடலு மனமும் உயிரும்—மண்ணில்
உன்னுயிர்த் தொண்டுகள் செய்தே
திடமுற் றிருக்கப் பலந்தா—என்
சிந்தையிற் கோயில்கொள் சாமீ! ரு

எல்லா வுலகமு நீயே—வாழும்
எல்லா உயிர்களு நீயே
அல்லாவும் பிரமமும் நீயே—சுத்
தான்மச் சுடரொளி நீயே சு

சத்திய மேயுன் வடிவம்—சர்வ
சமரஸ மேயுன் விழிகள்
எத்திசை யும்உன தாடல்—போற்றி
எங்கும் நிறைந்த பரமா! எ

## 20. பிள்ளையொழுக்கம்

(யமுனகல்யாணி—ஆதிதாளம்)

அன்பை வளர்க்க வேண்டும்—கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போற் பிறரை யெண்ணி—கிளியே
உதவி புரிய வேண்டும். க

தெய்வ நினைப்பு வேண்டும்—கிளியே
தேச நினைப்பு வேண்டும்
மெய்மை யொழுக்கம் வேண்டும்—நெஞ்சில்
வீர வுறுதி வேண்டும். உ

அன்னைசொற் கேட்க வேண்டும்—தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும்
தன்னை வணக்க வேண்டும்—பிறர்
தம்மை மதிக்க வேண்டும். ங

வலிமை வளர்க்க வேண்டும்—நீ
வாழு மனையித் தேகம்
எளிய வாழ்க்கை வேண்டும்—உயர்
எண்ணம் ஓங்க வேண்டும். ச

ஆசிரி யர்க்க டங்கிக்—கிளியே
அறிவை வளர்க்க வேண்டும்
தேசம் வாழுந் தொழிலில்—மிக்கத்
திறமை யோங்க வேண்டும். ௫

காலை மாலை தோறும்—கிளியே
கடவுள் வணக்கம் வேண்டும்
வேலை தன்னில் உள்ளம்—ஊன்றி
வெற்றி யோங்க வேண்டும். ௬

அச்ச மற்ற உண்மை—கிளியே
ஆண்மை யுள்ள நெஞ்சம்
கொச்சை யற்ற பேச்சு—நல்ல
கொள்கை கொண்ட நட்பு, ௭

இன்ன லற்ற சாந்தம்—யார்க்கும்
இனிது செய்யும் பொறுமை
தன்ன லத்த விர்ப்பு—கிளியே
தரும மாகும் இவையே. ௮

பிரிய மான கிளியே—தமிழ்
பேசுஞ் செல்வக் கிளியே
பெரிய னாகி நாளும்—நல்ல
பேர் சிறந்து வாழ்வாய்! ௯

## 21. இளம் பயிர் வாழ்த்து

(காப்பி—முத்தாளம்)

ஈசன் கருணையினால்—நாளும்
எந்தமிழ்த் தாயின் இளம்பயிர் வாழிய
பூசனை மாமலர்கள்—பொங்கிப்
புன்னகை யோங்கிடும் புண்ணியச் சோலைபோல்

மாசற்ற வாழ்க்கையுடன்—ஞான
மாணிக்க நற்கனி வேணுமட்டுந் தந்து
தேசஞ் செழித்திடவே—ஆத்மத்
தீரம்—பொதுநல—வீரம் பொலிந்திட (ஈசன்)

கலவிக் கதிர்விரிந்தே—புதுக்
காலை யழகினைப் போலக் கலைவளம்
மல்கிய மாண்புடனே—குரு
மாதா பிதாக்கள் மகிழ்ந்து புகழ்ந்திட
நல்ல நடை யுடனே—உண்மை
நண்பு நடுநிலை அன்பு வளர்ந்திடச்
செல்வத் தொழிற் புலமை—பெற்றுத்
தேசம் உயர்ந்திடும் சேமநிதி போன்றே. (ஈசன்)

## 22. வீட்டுத்திரு வாழ்க!

(செஞ்சுருட்டி—ஏகதாளம்)

பொங்குசெந் தாமரை பூத்த முகத்தினற்
புன்னகைத் தேன் பொழிவாள்—எங்கள்
மங்கல மான மனையறங் காக்கும்
மஹா லக்ஷ்மி வாழியவே! (பொங்கு)

வீரரைப் பெற்றெளிர் வீட்டுத் திருவிற்கு
வெற்றிகள் கூறிடுவோம்.......—நிதம்
பாரினை யூட்டி வளர்க்கும் பராசக்தி
என்றவள் பண்புரைப்போம் (பொங்கு)

காதலும், கற்பும், கனிவும், அழகும்,
கலையும் சுதந்தரமும்—இந்த
மேதினி யின்பங்கள் யாவையு மேவி
விளங்குக வீட்டரசி! (பொங்கு)

எங்குலக் கற்பகந் தங்கக் கனிகளே
ஈந்துநீ டோங்குகவே!—அன்புச்
செங்கை யமுதம் அருந்தி யுலகெங்கும்
தீரர் செழித்திடவே—ஜய
வீரர் செழித்திடவே! (பொங்கு)

* * *

இன்றுசேய் நாளையே
யிப்புவியின் கையாகும்
என்றுசேய் போற்ற வினிது.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1533
நன்கொடை எண்: 1533

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

Printed at Shakti Press Ltd. (Shanti Press), Madras.

# திருக்காட்சி

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

இந்நூல், அடிகள் கன்னியாகுமரியில் கண்ட கவிக்கனவுச் சித்திரமாகும். இது குமரியில் தவம் புரியும் கன்னித் தாயின் பெருமையைக் கவினுற விளக்குவது; மனித சமுதாயத்திற்குப் பல நீதிகளையும், கடவுளுணர்வினையும் நல்குவது. மில்தன், காளிதாஸன் போன்ற உயர்ந்த காவியம், எளிய இனிய நடை.

விலை அணா 4

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
- திருச்சி ஜில்லா -